## தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை - 2014

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய வெளிப்படுத்தல் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 43 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்**

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட வாகனங்களுக்கிடையே இன்னும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற வாகனங்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திலிருந்தும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்தும் அதிகாரசபைக்கு அறவிடப்பட வேண்டிய முறையே ரூபா 8,796,480 தொகை மற்றும் ரூபா 136,970 தொகை கிடைக்க வேண்டியதாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையினால் 2006 ஆம் ஆண்டின் போது விவசாயக் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்ட ரூபா 2,000,000 கடன் தொகை, உடன்படிக்கையின் பிரகாரம் கடன் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 06 மாதங்களுக்குள் வட்டியின்றி சமமான தவணைகளில் செலுத்தித் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், அதில் இன்னும் கிடைக்க வேண்டிய ரூபா 1,450,000 தொகை நடைமுறைச் சொத்தாக காணப்பட்ட போதிலும் அத்தொகை நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) அதிகாரசபையின் உத்தியோகத்தரொருவர் முறைகேடாகக் கையாண்ட பணம் மற்றும் அதற்குரிய வட்டியாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,845,676 தொகை கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மோசடித்தன்மை தொடர்பான எண்ணக்கருவுக்கு முரணாக அறவிடுவதற்கான அபாயம் காணப்படுகின்ற இந்தக் கடன் தொகைக்காக கிடைக்கவேண்டிய வட்டி வருடாந்தம் கணக்கு வைக்கப்பட்டிருந்தமையால் நிதிக்கூற்றுக்களில் வருமானமும் சொத்துக்களும் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

**2.3 பெறவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனியொன்றிற்கு 1985 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 26,715,037 தொகையான கடனுக்காக வருடாந்தம் வட்டி

---

கணிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை கணிப்பிடப்பட்ட வட்டி ரூபா 28,081,263 ஆகும். எவ்வறாயினும் இந்த வட்டித் தொகை முழுவதும் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தது. அந்த நிறுவனத்திற்கே வட்டியற்ற கடனாக ரூபா 31.55 மில்லியன் தொகை 2002 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்ததுடன் அத் தொகையும் அதிகாரசபைக்கு அறவிடப்படாது காணப்பட்டது.

(ஆ) தேங்காய் துருவல் ஆலை உரிமையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய கட்டணம் மற்றும் புதிய தேங்காய் மற்றும் கொப்பரா ஏலவிற்பனை நடவடிக்கைகளுக்காக அறவிட வேண்டிய நில வாடகையான ரூபா 1,801,696 தொகையினை அறவிடுவதற்கு 2015 யூன் 30 ஆந் திகதி வரை அதிகாரசபை தவறியிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டில் அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 15,457,175 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 36,419,413 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 20,962,238 தொகையான வீழ்ச்சியினைக் காண்பித்தது. அரசாங்கத்தின் மானியம் உள்ளடங்கலான மொத்த வருமானம் ரூபா 57,605,867 இனால் அதிகரித்திருந்த போதிலும் அதற்கு இணையாக ஆராய்ச்சியும் அபிவிருத்தியும், பயிற்சி உள்ளடங்கலான ஏனைய செலவினங்கள் ரூபா 75,531,318 இனால் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிராதனமாகத் தாக்கமளித்திருந்தது. அதிகாரசபையின் மொத்த வருமானத்தில் 71 சதவீதம் திறைசேரி நிதி ஏற்பாடுகளையும், 13 சதவீதம் செயற்பாட்டு வருமானங்களையும், 16 சதவீதம் நானாவித வருமானங்களையும் உள்ளடக்கியிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெங்கு சார்ந்த கைத்தொழிலாளர்களின் உற்பத்திகளை சர்வதேசத்திற்கு முன்வைப்பதற்காக மீளாய்வாண்டில் ரஷ்யாவின் மொஸ்கோ மற்றும் ஜேர்மனியின் எசென்ஹிதி என்பவற்றில் நடாத்தப்பட்ட வர்த்தகக் கண்காட்சிக்காக பங்குபற்றுவதற்கு உற்பத்தி / ஏற்றுமதியாளர்களைத் தெரிவு செய்கையில் முறையான புள்ளி வழங்கும் திட்டமொன்று பின்பற்றப்படாதிருந்ததுடன் ஏற்றுமதியாளர்கள் அதிகாரசபையுடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கைகளில் அதிகாரசபையின் தரப்பில் அதிகாரம் பெற்ற ஒருவர் கையொப்பமிட்டிருக்கவில்லை. அவ்வாறே அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிப் பிணைமுறிகள் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் கவனத்தில் கொள்ளக்கூடிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் ரஷ்யாவின் மொஸ்கோ வர்த்தகக் கண்காட்சியின் செயல்முன்னேற்றமும் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபை மற்றும் இலங்கை நியமங்கள் நிறுவகம் என்பன ஒன்றிணைந்து 45 தேய்காய் துருவல் உற்பத்தி ஆலைகளுக்கு உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைக்காக உபபொருள் பகுப்பாய்வு மற்றும் அவதி வழி கட்டுப்பாட்டுத் தரச் சான்றிதழை (HACCP) அறிமுகப்படுத்தும் செயற்பாடுகளுக்காக தனியார் நிறுவனமொன்று மீளாய்வாண்டின் யூலை மாதத்தில் தெரிவு செய்யப்பட்டிருந்தது. அதிகாரசபை அந்த நிறுவனத்துடன் ரூபா 4,050,000 மொத்தப் பெறுமதிகொண்ட

உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்ததுடன் அதில் 20 சதவீதமான ரூபா 810,000 ஆரம்ப முற்பணத் தொகை முதலாம் கட்டமாக அந்த மாதத்தின் போதே செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம், இரண்டாம் கட்டத்தின் போது 45 தேய்காய் துருவல் ஆலைகளை சான்றுறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் 2015 சனவரி 31 ஆந் திகதி முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் 2015 யூன் வரையிலும் இந்த செயற்பாடுகள் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) தெங்கு உற்பத்திகளின் தரத்தினையும் நியமங்களையும் நல்லமுறையில் பேணப்பட்டு சர்வதேச சந்தைக்கு பண்டப் பெயரொன்றின் கீழ் இலங்கையின் தெங்கு உற்பத்திகளை முன்வைப்பதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் பண்டப் பெயரொன்றைப் பெற்றுக் கொள்வதற்குரிய செயற்பாடுகளுக்குத் தேவையான திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு ரூபா 350,000 தொகை மதியுரையாளருக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த பண்டப் பெயரைப் பெற்றுக்கொள்வதற்குரிய சகல செயற்பாடுகளும் குறித்து விளக்கமளித்தலொன்று இன்றி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தமையினால் இந்த பண்டப் பெயரைப் பெற்றுக் கொள்ளுதல் 2015 யூன் 15 ஆந் திகதி வரையும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த பண்டப் பெயரைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகளுக்குத் தேவையான இலட்சினையொன்றை வடிவமைப்பதற்காக கூறுவிலை கோரப்படாமல் ரூபா 135,000 தொகை வெளிநபரொருவருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) தெங்கு பயிர்செய்கை நிலத்தின் அளவு மற்றும் தென்னை மரங்களின் எண்ணிக்கை என்பவற்றை Geographic Information System தொழில்நுட்பத்தின் மூலம் கணிப்பிடுவதற்காக கொழும்பு பல்கலைக்கழகத்துடன் அதிகாரசபை 2014 யூன் 03 ஆந் திகதி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது. உடன்படிக்கையின் படி மொத்தச் செலவின மதிப்பீடு ரூபா 2,587,500 ஆக இருந்ததுடன் அதில் 20 சதவீதம் அல்லது ரூபா 517,500 தொகை 2014 திசெம்பர் 15 ஆந் திகதி கொழும்புப் பல்கலைக்கழகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. 2015 பெப்ரவரி 05 அளவில் அந்த செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும் கணிப்பீடுகளின் விளைவுகளை உள்ளடக்கிய அறிக்கையொன்று 2015 மே 31 ஆந் திகதி வரையும் கிடைத்திருக்கவில்லை.

(உ) வீட்டுப் பாவனையின் போது ஏற்படுகின்ற தேங்காயின் விரயத்தைக் குறைத்து, தெங்கு ஏற்றுமதி வருமானத்தை உயர்த்தும் நோக்குடன் தேங்காய்களுக்குப் பதிலாக தேங்காய்ப்பால், தேங்காய் பால்மா மற்றும் தேங்காய் கிறீம் என்பவற்றை பிரசித்தப்படுத்துவதற்காக அதிகாரசபையின் விளம்பர நிறுவனங்களாக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனமும் இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத்தாபனமும் தெரிவு செய்யப்பட்டிருந்தன. 2014 ஆகஸ்ட் 14 ஆந் திகதி முதல் 2015 ஏப்ரல் 13 வரையான காலத்திற்கான விளம்பரக் கட்டணமாக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 9,344,832 தொகையினையும், 2014 செப்தெம்பர் 01 ஆந் திகதி முதல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்திற்குரிய விளம்பரக் கட்டணமாக இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 3,936,228 தொகையினையும் அதிகாரசபை செலுத்தியிருந்தது. அதில் முறையே ரூபா 8,796,480 தொகை மற்றும் ரூபா 136,970 தொகைகள் எஞ்சியுள்ளதாக ரூபவாஹினிக் கூட்டுத்தாபனமும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் அதிகாரசபைக்கு அறிவித்திருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களின் படி அதிகாரசபைக்கு மீளச் செலுத்த வேண்டிய தொகை இல்லை என்பதும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அதிகாரசபைக்கு கிடைக்கவேண்டிய தொகை ரூபா 1,269,922 என்பதும் உறுதிப்படுத்தப்பட்டது. மேலும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தினாலும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினாலும் விளம்பர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு போதியளவான தகவல்கள் அதிகாரசபையினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 பதவியணியினர் நிர்வாகம்**

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 259 ஆகவும் உள்ளபடியான எண்ணிக்கை 178 ஆகவும் இருந்தமையால் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குத் தேவையான 81 பதவிகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் வெற்றிடமாகக் காணப்பட்டன.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிகளின் பயன்படுத்தல்
(இ) பதவியணியினர் நிர்வாகம்
(இ) செயற்பாட்டு நிர்வாகம்